செய்தி வெளியீடு எண்: 186 நாள் : 07.04.2016

**தேர்தல் விதி மீறி, ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.45 லட்சம் மதிப்புள்ள 80,630 கிலோ பாமாயில் ரூ.3.47 கோடி மதிப்பிலான தங்க, வெள்ளி நகைகள் பறிமுதல் இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கம் ரூ.20.32 கோடி.**

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. இந்த நிலையில், பட்டுக்கோட்டையிலிருந்து 5.4.16 அன்று வாகனத்தில் எடுத்துச் சென்ற 10,115 கிலோ பாமாயில் மற்றும் திருவையாறு பகுதியிலிருந்து எடுத்துச் சென்ற 20,500 கிலோ பாமாயில், கீழகோட்டையூரிலிருந்து எடுத்துச் சென்ற 29,080 கிலோ வேதாரண்யத்திலிருந்து எடுத்துச் சென்ற 20,935 கிலோ பாமாயில் உட்பட மொத்தம் ரூ.45 லட்சம் மதிப்புள்ள 80,630 கிலோ பாமாயில் உரிய ஆவணங்கள் இல்லாததால் பறிமுதல் செய்யப்பட்டது. திருவள்ளூரில் அனுமதியில்லாமல் கொண்டு சென்ற ரூ.5 லட்சம் மதிப்பிலான 13,500 பாக்கெட் சிகரெட்டுகள், 100 வேட்டிகள், 400 புடவைகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 4,485 கிலோ பருத்தி துணிகள் அனுமதி இல்லாமல் கொண்டு சென்றதால் பறக்கும் படையால் பறிமுதல் செய்யப்பட்டன. இதுவரை பறக்கும் படையினரால் ரூ.8.33 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நிலையான கண்காணிப்புக் குழுவினர் (SST) 5.4.16 அன்று சோதனை செய்த போது, கரூர் மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ3.47 கோடி மதிப்பிலான 19 கிலோ தங்க நகைகள், 24 கிலோ வெள்ளி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.1.93 லட்சம் நாமக்கல் மாவட்டத்தில் ரூ.2.50 லட்சம், தூத்துக்குடியில் ரூ.3.60 லட்சம் என மொத்தம் ரூ.8.03 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை இக்குழுவினரால் ரூ.11,98,84,294/– ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

உரிய அனுமதியின்றி ஆட்டோவில் கட்சி கொடியினை கட்டியது, பொது இடத்தில் இருந்த கட்சி கொடியினை அகற்றாதது, அனுமதி பெறாமல் துண்டுப் பிரசுரம் வழங்கியது, சுவர் விளம்பரம் செய்தது, வாகனத்தில் கட்சிக் கொடியினை கட்டிச்சென்றது போன்ற தேர்தல் விதிமுறைகளை மீறியது ஆகியவற்றிற்காக பல்வேறு அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**